நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விலை வீழ்ச்சி: பதறும் கத்தரி விவசாயிகள்**

First Published : 23 Apr 2011 03:21:11 AM IST



நாணமேடு விவசாயி ஆனந்தனின் தோட்டத்தில் கத்தரிக்காய் பறிக்கும் பெண்கள்.

கடலூர், ஏப். 22: கடலூரில் கத்தரிக்காய் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்ததால், விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்து உள்ளனர்.

÷கடலூர் காய்கறி அங்காடிகளில் உள்ளூர் கத்தரிக்காய் கிலோ ரூ.8 முதல் ரூ. 10 வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் விவசாயிகளுக்கு கிடைக்கும் விலை போக்குவரத்துச் செலவு உள்பட கிலோவுக்கு ரூ.3 அல்லது ரூ.4 வரைதான்.

÷கடலூர் பகுதியில் நாணமேடு உச்சிமேடு, சுப உப்பளவாடி உள்ளிட்ட கிராமங்களிலும் பண்ருட்டி பகுதிகளிலும் 500 ஏக்கரில் கத்தரிக்காய் பயிரிடப்பட்டு உள்ளது. நல்ல விளைச்சல் தரும் செம்பட்டி ரகம் பயிரிடப்பட்டு உள்ளது. டிசம்பர் மாதத்தில் நாற்றுவிட்ட கத்தரிச் செடிகளில், 15 நாள்களாக கத்தரிக்காய் அறுவடை நடைபெற்று வருகிறது. முற்றல் மற்றும் பூச்சித் தாக்குதலுக்கு உள்ளான கத்தரிக்காய்களை தோட்டத்தின் அருகே கொட்டி வைத்துள்ளனர்.

÷கடந்த ஆண்டு கடலூர் பகுதி விவசாயிகளுக்கு கத்தரி மகசூல் நல்ல லாபம் கிடைத்தது. கிலோவுக்கு ரூ. 10 முதல் ரூ. 15 வரை விலை கிடைத்தது. அதை நம்பி இந்த ஆண்டும் கத்தரிக்காய் பயிரிட்டனர். ஆனால் இந்த ஆண்டு கிலோவுக்கு ரூ. 3 முதல் ரூ. 4 வரை தான் விலை கிடைக்கிறது என்கிறார்கள் கடலூர் விவசாயிகள். மேலும் இந்த ஆண்டு கத்தரிச் செடிகளில் பூச்சித் தாக்குதலும் அதிகரித்து இருப்பதாக விவசாயிகள் கூறுகிறார்கள்.

÷இதனால் கத்தரி விவசாயிகளுக்கு செலவு செய்த பணம்கூட கிடைக்காது என்ற அவல நிலை உருவாகி இருக்கிறது.

÷இது குறித்து நாணமேடு விவசாயி ஆனந்தன் கூறுகையில், கடந்த ஆண்டு 3 ஏக்கரில் கத்தரி சாகுபடி செய்து இருந்தேன். கிலோவுக்கு ரூ. 10 முதல் ரூ. 15 வரை விலை கிடைத்தது. இந்த ஆண்டு 100 நாள் வேலைத் திட்டம் காரணமாக, விவசாய வேலைகளுக்கு ஆள்கள் கிடைக்காததால், ஒரு ஏக்கரில் மட்டுமே கத்தரி பயிரிட்டேன்.

÷ஆனால், கத்தரிச் செடிகளில் குருத்துப்புழு உள்ளிட்ட பூச்சித் தாக்குதல் அதிகம் காணப்படுகிறது. இதனால் மகசூல் பாதிக்கப்பட்டு உள்ளது. நியாயமான விலையும் கிடைக்கவில்லை. வண்டிகளில் ஏற்றி கடலூர், புதுவை அங்காடிகளுக்குக் கொண்டு சென்று, கமிஷன் வியாபாரிகளிடம் விற்பனை செய்கிறோம். கிலோவுக்கு ரூ. 3 அல்லது ரூ. 4 தான் கிடைக்கிறது.

÷கடந்த 15 நாள்களில் ரூ.500க்கு தான் கத்தரிக்காய் விற்பனை செய்து இருக்கிறேன். ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரத்துக்கு மேல் செலவு செய்து இருக்கிறேன். செலவு செய்த பணம் கூட கிடைக்காது என்றார்.

காரணம் என்ன?

÷கடலூர் திருப்பாப்புலியூர் பான்பரி மார்க்கெட் காய்கறி மொத்த வியாபாரி பக்கிரான் கூறுகையில், பண்ருட்டி நாணமேடு பகுதிகளில் இருந்து கிலோ ரூ. 3 க்கு கத்தரிக்காய் கொள்முதல் செய்கிறோம். கடந்த ஆண்டு கத்தரிக்காய் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்தது. அதை நம்பி இந்த ஆண்டு கூடுதல் நிலங்களில், விவசாயிகள் கத்தரி பயிரிட்டனர். உற்பத்தி அதிகமானதால் விலை வீழ்ச்சி அடைந்து விட்டது என்றார்.

**சூரியகாந்தி வித்துக்களை உடனடியாக விற்பது நல்லது**

First Published : 21 Apr 2011 02:30:29 PM IST

Last Updated : 21 Apr 2011 02:41:58 PM IST

சூரியகாந்தி வித்துக்கள் விலையேறுவதற்கான வாய்ப்பு குறைவாக இருப்பதால் உடனடியாக அவற்றை விற்குமாறு வேளாண் பல்கலைக்கழகம் விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

சந்தையில் 100 மில்லி லிட்டர் அளவில் 40- 42 கிராம் எடை இருக்கும் வித்துக்களுக்கு அதிக விலை கிடைக்கும். விதையின் எடையைப் பொருத்து விலை மாறுபடும். விலையேற்றத்துக்கு மிகக் குறைந்த வாய்ப்பே உள்ளதால், அறுவடை செய்த சூரியகாந்தி விதையை உடனடியாக விற்குமாறு விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

இதுகுறித்த விவரங்களுக்கு, தேசிய வேளாண்மை புதுமைத் திட்டம்- உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு வேளண்மைப் பல்கலைக்கழகம், கோவை- 641 003 என்ற முகவரியைத் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி: 0422- 2431405.

**அதிக லாபம் தரும் விதைநெல் உற்பத்தி**

தே.சாலமன்

First Published : 21 Apr 2011 02:20:07 PM IST

செய்யாறு: விவசாயிகள் நெல்லை தானியமாக விற்பதை விட விதை நெல்லாக விற்றால் அதிக லாபம் சம்பாதிக்கலாம் என செய்யாறு கோட்ட வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் தற்பொழுது நெல் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. இருப்பினும் ஒவ்வொரு பருவத்திலும் அறுவடை செய்த நெல்லையே விதையாக உபயோகித்து நாம் பயிர் செய்து வருகிறோம். இவ்வாறு தொடர்ந்து விதையாக பயன்படுத்தி வருவதால் அவற்றின் வீரியம் குறைந்து விளைச்சலும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது.

எனவே தகுந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடித்து தரமான விதை நெல்லை உற்பத்தி செய்து பயரிடுவதன் மூலம் மகசூல்

அதிகரிக்கும்.

தரமான விதை

பாரம்பரிய குணங்கள் கொண்ட, அடர்த்தியான, வீரியமுள்ள விதையாக இருக்க வேண்டும். மேலும் களை, பிற ரகங்கள் கலப்பில்லாமலும், பூச்சி, பூஞ்சாணங்களால் தாக்கப்படாமலும், தூசி துரு இல்லாமலும், முளைப்புத்திறன் அதிகமாகவும் இருக்க வேண்டும்.

விதை நேர்த்தி

மேற்கண்ட தரமான விதையை பெற உப்பு கரைசல் விதை நேர்த்தியும், பெவிஸ்டின் பூஞ்சான விதை நேர்த்தியும் செய்ய வேண்டும். வீரியமான, அடர்த்தியான, அதிக முளைப்புத்திறன் உள்ள சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும்.

விதை நெல்லை ஊறவைக்கும் போது நீர் சுத்தமானதாக இருக்க வேண்டும். இதனால் நீர் மூலம் பரவும் நோய் வராமல் தடுக்கலாம்.

நாற்றங்கால் தேர்வு

பயரில் கலப்பு வருவதை தடுக்க முன்பு பயரிட்ட நிலமல்லாத நாற்றாங்களாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

நாற்றங்காலுக்கு அடியுரம்

குறுகிய கால நெல் ரகத்திற்கு, 13-14 நாள்கள் உள்ள நாற்றுக்கு ஒரு சென்ட்க்கு 2 கிலோ டிஏபியும் (நாற்று எடுக்கும் போது வேர் அறுபடமால் இருக்க பச்சை பிடிக்க) நாற்றுவிட்ட 10-ம் நாள் கால் கிலோ பியூரடானும் இடவேண்டும்.

மத்திய கால நெல் ரகத்திற்கு, 20-25 நாள்கள் உள்ள நாற்றுக்கு ஒரு சென்ட்க்கு 2 கிலோ டிஏபியும், நாற்றுவிட்ட 10-ம் நாள் கால் கிலோ பியூரடானும் இடவேண்டும்.

நீண்ட கால நெல் ரகத்திற்கு 25-30 நாட்கள் உள்ள நாற்றுக்கு ஒரு சென்ட்க்கு 2 கிலோ டிஏபியும், நாற்றுவிட்ட 10-ம் நாள் கால் கிலோ பியூரடானும் இடவேண்டும்.

வயல் தயார் செய்தல்

குறுகிய கால நெல் ரகத்துக்கு யூரியா 50, சூப்பர் 125, பொட்டாஷ் 20 மற்றும் ஒரு ஏக்கருக்கு 20 வண்டி தொழு உரம் இட வேண்டும்.

மத்திய கால நெல் ரகத்துக்கு யூரியா 50, சூப்பர் 125, பொட்டாஷ் 30 மற்றும் ஒரு ஏக்கருக்கு 20 வண்டி தொழு உரம் இட வேண்டும்.

நீண்ட கால நெல் ரகத்துக்கு யூரியா 50, சூப்பர் 125, பொட்டாஷ் 40 மற்றும் ஒரு ஏக்கருக்கு 20 வண்டி தொழு உரம் இட வேண்டும்.

நடவு முறை

குறுகிய கால நெல் ரகத்துக்கு 20ல10 செ.மீ. இடைவெளியில் ஒரு குத்துக்கு 2 நாற்று வீதம் 1 அங்குல ஆழத்தில் நடவு செய்யவேண்டும்.

மத்திய கால நெல் ரகத்துக்கு 20ல15 செ.மீ. இடைவெளியில் ஒரு குத்துக்கு 2 நாற்று வீதம் 1 அங்குல ஆழத்தில் நடவு செய்யவேண்டும்.

நீண்ட கால நெல் ரகத்துக்கு 20ல20 செ.மீ. இடைவெளியில் ஒரு குத்துக்கு 2 நாற்று வீதம் 1 அங்குல ஆழத்தில் நடவு செய்யவேண்டும். 8 அடிக்கு 1 அடி இடைவெளி விட்டு நடவு செய்ய வேண்டும்.

நீர் நிர்வாகம்

நடவு முடிந்த பின் ஒரு வாரம் வரை 2 செ.மீ. நீர் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் 30-வது நாள், வயலில் இருந்து நீர் முழுவதும் வடித்து ஓரிருநாள்கள் அந்த நிலையில் வைத்திருக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதால் மண்ணுக்குள் காற்றோட்டம் அதிகமாகி வேரின் வளர்ச்சி கூடி தூர்கள் அதிகரிக்கும்.

அதன் பின் தூர்கள் பிடிக்கும் போது (தலை பருவம்) 5 செ.மீ. நீர் தேங்கியிருக்கமாறு பார்த்துக் கொள்ளவும். எக்காரணத்தாலும் பூட்டை வரும் சமயம், பூக்கும் சமயம், பால் பிடிக்கும் சமயங்கலில் நீர் தட்டுப்பாடில்லாமல் கவனித்து கொள்ள வேண்டும். இல்லையெனில் நெல்

மணியின் எடை குறைந்து மகசூல் பாதிக்கப்படும். முதிர்ச்சி பருவத்தில் அறுவடைக்கு 15 நாள்களுக்கு முன்பாக தண்ணீர் சீராக வடித்து பயிரை பராமரிக்கலாம்.

களைக் கட்டுப்பாடு

களைகளை ஆரம்பத்திலிருந்தே கட்டுப்படுத்துவகு மிகவும் அவசியம். இதற்காக நாற்று நட்ட மூன்றாவது நாள்களுக்குள் ஒரு ஏக்கருக்கு ஒரு லிட்டர் பூட்டோகுளோர் களைக்கொல்லியை 20 கிலோ மணலுடன் கலந்து வயலில் தெளித்து விட வேண்டும். மேலும் 30-35 நாள்களுக்குள் ஒரு கைக்களை எடுப்பது மிகவும் அவசியம்.

மேலுரம்

நெல் விதைப்பயிருக்கு மூன்று முறை மேலுரங்கள் இடவேண்டும். யூரியாவை இரண்டு மேலுரங்களாக முதல் களை எடுத்தவுடன் ஒரு முறையும், பூக்கும் சமயத்தில் இன்னொரு முறையும், மூன்றாவது மேலுரம் பொட்டாஷை கதிர் பால் பிடிக்கும் சமயத்திலும் இட வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுத்த நெற்பயிரின் வயதுக்கேற்றவாறு மேலுரம் அளவு மாறும்.

குறுகிய கால நெல் ரகத்திற்கு முதல் முறையாக 25 கிலோ யூரியாவும் இரண்டாவது முறையாக 25 கிலோ யூரியாவும், பொட்டாஷ் முதல் முறையாக 20 கிலோவும் இடவேண்டும்.

மத்திய கால நெல் ரகத்திற்கு முதல் முறையாக 25 கிலோ யூரியாவும் இரண்டாவது முறையாக 25 கிலோ யூரியாவும், பொட்டாஷ் முதல் முறையாக 30 கிலோவும் இடவேண்டும்.

நீண்ட கால நெல் ரகத்திற்கு முதல் முறையாக 25 கிலோ யூரியாவும் இரண்டாவது முறையாக 25 கிலோ யூரியாவும், பொட்டாஷ் முதல் முறையாக 40 கிலோவும் இடவேண்டும்.

பயிர் பாதுகாப்பு

விதைப் பயிர்களையும் நோய் தாக்குதல் இன்றி பாதுகாப்பது தரமான விதை உற்பத்திக்கு மிகவும் அவசியம். எனவே அவ்வப்போது தென்படுகின்ற பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்பட்ட பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும்.

கலவன் நீக்கும் தருணம்

பூக்கும் முன் அதிக உயரம் மற்றும் மிகவும் குட்டையான செடிகள், மிகவும் சீக்கிரமாக பூக்கும் செடிகள் நீக்கப்பட வேண்டிய கலவன்களாகும். பூக்கும் தருணத்தில் மிகவும் காலதாமதாமாகப் பூக்கும் செடிகள், பொட்டு நெல் ஆகியவை நீக்கப்பட வேண்டிய கலவன்களாகும். அறுவடைக்கு முன்பு மீசை நெல் நீக்கப்பட வேண்டிய கலவன் ஆகும். அறுவடையின் போது விதைப்பயிர் மணியின் பருமனுக்கு ஒத்துப் பார்த்து நீக்கப்பட வேண்டிய சன்னம் அல்லது குண்டு நெல் விதை ஆகியவை நீக்கப்பட வேண்டிய கலவன்களாகும்

காயமின்றி கதிரடித்தல்

அறுவடை செய்த கதிர்களை அடிக்கும் போது விதையின் ஈரப்பதம் 15 முதல் 18 சதம் வரை இருத்தல் வேண்டும். இந்த ஈரப்பதமானது விதையில் மெத்தை போல் செயல்பட்டு நாம் அடிக்கும்

வேகத்துக்கு ஈடுகொடுத்து விதைகளுக்கு உள்ளேயும் (அ) வெளிக்காயங்கள் ஏற்படாதவாறு பாதுகாக்கிறது.

விதைகளை உலர்த்துதல்

விதைகளை வெயிலில் உலர்த்தும் போத தினமும் காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும் பின்னர் மாலை 3 மணி முதல் 5 வரையிலும் உலர்த்துதல் நல்லது. 12 மணி முதல் 3 மணி வரையில் உள்ள காலத்தை தவிர்ப்பது மிகவும் நல்லதாகும். ஏனெனில் இந்த இடைக்கால நேரத்தில் சூரியனின் புற ஊதாக் கதிர்களின் வீச்சு அதிகமாகி விதையின் தரம் மிகவும் பாதிக்கப்படும்.

விதை சேமிப்பு

குறைந்த கால சேமிப்புக்கு விதைகளை 13 சதவீத ஈரப்பதத்திற்கு காய வைத்து துணிப்பைகளிலோ அல்லது சாக்குப் பைகளிலோ நிறைத்து சேமிக்க வேண்டும். நீண்ட காலம் விதைகளை சேமிக்க விதைகளின் ஈரப்பதத்தை 9 சதவீத அளவிற்குக் குறைத்து காற்றுப்புகாத பாலீதின் பைகளில் சேமித்து வையுங்கள்.


விதை நேர்த்தி

விதைகளை சேமிக்கும் முன் பூஞ்சாணக் கொல்லி கொண்டு விதை நேர்த்தி செய்யுங்கள். இதற்கு பெவிஸ்டின் மருந்தை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் என்ற விகித்தில் கலக்க வேண்டும். இதற்குப் பதிலாக விதைகளை குளோரினேற்றம் செய்தும் சேமிக்கலாம்.

தினமலர்

**உற்பத்தி குறைவால் மாம்பழம் விலை உயர வாய்ப்பு**

ஏப்ரல் 23,2011,00:17



சென்னை: கடந்த ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில், பருவம் தவறி பெய்த மழையால் மாம்பழ விளைச்சல் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக,வரும் வாரங்களில், சந்தைக்கு மாம்பழ வரத்து குறைந்து, விலை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

சென்ற ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில், இந்தூர், ஆக்ரா, டில்லி, நாக்பூர்,மும்பை அகமதாபாத் மற்றும் ஹைதராபாத் உள்ளிட்ட மாநிலங்களில், முதல் தர மாம்பழங்கள் ஒரு டன் 40,000 -60,000 ரூபாய் என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டன.

தற்போது, இச்சந்தைகளுக்கு, தரம் குறைந்த மாம்பழங்களின் வரத்து அதிகரித்ததை தொடர்ந்து இவற்றின் விலை, 20,000-25,000 ரூபாயாக சரிவடைந்துள்ளது.கிருஷ்ணா மாவட்டத்தில், 65, 650 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மாந்தோப்புகளில் அனைத்து வகையான மாம்பழ வகைகளும் உற்பத்தியாகின்றன. சித்தூர் (61,407 ஏக்கர்), கம்மம் (45,435 ஏக்கர்), விஜயநகரம் (40,985 ஏக்கர்) ஆகிய மாவட்டங்களிலும் பல வகையான மாம்பழங்கள் விளைகின்றன. இது தவிர, நெல்லூர், கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி, மெகபூப்நகர், கடப்பா,அனந்தபூர் ஆகிய மாவட்டங்களிலும் மாம்பழங்கள் அதிக அளவில் உற்பத்தியாகின்றன.பொதுவாக, பருவ நிலை நன்கு இருந்தால், ஒரு எக்டேரில் 8.6 டன் அளவிற்கு மாம்பழ சாகுபடியை மேற்கொள்ளலாம். ஆனால், நடப்பாண்டில், பருவம் தவறிய மழையால் மாம்பழ உற்பத்தி, எக்டேருக்கு, 6-6.5 டன்னாக குறைந்து போயுள்ளது.நாட்டின் மாம்பழ ஏற்றுமதி 2007-08ம் நிதியாண்டில் 11.08 டன்னாகவும், 2008-09ம் நிதியாண்டில், 100.2 டன்னாக அதிகரித்து காணப்பட்டது. ஆனால், 2009-10ம் நிதியாண்டில், தரம் குறைந்த மாம்பழ விளைச்சலால் இதன் ஏற்றுமதி, 76 டன்னாக குறைந்து போனது.நடப்பாண்டில் நாட்டின் மாம்பழ ஏற்றுமதி 70-80 டன்னாக இருக்கும் என தோட்டக் கலை துறை தெரிவித்துள்ளது.இந்தியாவிலிருந்து, சிங்கப்பூர், மலேசியா, மற்றும் ஹாங்காங் ஆகிய நாடுகளுக்கு மாம்பழங்கள் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

**உரங்களை அதிக விலைக்கு விற்றால்உரிமம் ரத்தாகுமென எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 23,2011,01:45 IST

விழுப்புரம்:உரங்களை அதிக விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென கலெக்டர் எச்சரித்துள்ளார்.இது குறித்து கலெக்டர் பழனிசாமி செய்திக்குறிப்பு:
கள்ளக்குறிச்சி பகுதி உரக்கடைகளில் உரங்கள் அதிக விலைக்கு விற்பதாக வும், இருப்பு வைத்துக் கொண்டு இல்லையென கூறுவதாகவும், விலை பட்டியலின்றி விற்கப்படுவதாக புகார் எழுந்தது. அதிகாரிகள் குழு கடந்த 19ம் தேதி உரக்கடை களில் திடீர் ஆய்வு செய்ததில் இருப்பு இல்லை என கூறி அதிக விலைக்கு விற்பது போன்ற குறைபாடுகள் கண்டறிந்த கடைகளின் உரிமங்கள்

தற்காலிக நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி உரிய விலைக்கு உரங்களை வழங்க அனைவருக்கும் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது. உரங்களை அதிக விலைக்கு விற்பதோ, போலி ரசீது போட்டு கொடுத்தல், விலை பட்டியல் வைக்காமல் இருத்தல் போன்ற புகார் வந்தால் கடையின் உரிமம் ரத்து செய்து, குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.விவசாயிகள் உர மூட்டையில் குறிப்பிட்டுள்ள விலையை மட்டும் கொடுத்து வாங்க வேண்டும். அதிக விலைக்கு விற்பனை செய்தல், உரத்தை பதுக்கி வைத்து இல்லையென கூறுபவர்கள் குறித்து வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்திற்கு 04146 222291 என்ற தொலைபேசி எண்ணில் புகார் தெரிவிக்கலாம்.மாவட்டத்தில் விவசாயிகள் மாதாந்திர பயிர் சாகுபடிக்கு தேவையான அனைத்து வகை உரங்களும் போதுமான அளவில் கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் கடைகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் தங்களுக்கு தேவையான உரங்களை வாங்கி பயன்படுத்தலாம். இவ்வாறு கலெக்டர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

**தேர்தலுக்கு பின் உரங்களின் விலை திடீர் உயர்வுசெயற்கை தட்டுப்பாட்டால் விவசாயிகள் அதிர்ச்சி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 23,2011,01:44 IST

விழுப்புரம்:தேர்தலுக்குப் பின் செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி உரங்களின் விலையை உயர்த்தியுள்ளதால், விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலுக்குப் பின், தற்போது திடீரென உர மூட்டை 20 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை விலை உயர்ந்தது. தேர்தலுக்கு முன் ஒரு மூட்டை டி.ஏ.பி., 550 ரூபாய்க்கு விற்றது. அது தற்போது 650க்கு விற்கப்படுகிறது. யூரியா 270 - 290 ரூபாய்க்கும், பாக்டம்பாஸ் 450 - 550 ரூபாய்க்கும், சூப்பர் 200 - 225 ரூபாய்க்கும், ஜிப்சம் 100 - 140 ரூபாய்க்கும், 250 ரூபாய்க்கு விற்ற பொட்டாசை 270க்கும் விற்கின்றனர். கடைகளுக்கு ஏற்ப 10 முதல் 20 ரூபாய் வரை கூடுதலாக, அவரவர் இஷ்டம் போல் விற்கின்றனர்.

விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி, குறைந்த விலையில் வழங்க கூட்டுறவு வங்கிகள் மூலம் உரங்கள் விற்கப்படுகின்றன. மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு வங்கிகளுக்கு வரும் உரங்கள் ஓரிரு நாட்கள் மட்டுமே விற்கப்படுகிறது.விவசாயிகளுக்கு தகவல் தெரிவதற்குள் பெரிய விவசாயிகள், தனியார் கடைகளுக்கு ரகசியமாக அந்த உரங்களை கொடுக்கின்றனர்.இதனால், சிறு

விவசாயிகளுக்கு உரங்கள் கிடைப்பதில்லை. கரும்பு கடனிற்கு கூட போதிய உரங்களை கொடுக்காமல் தாமதம் செய்வதாக, விவசாயிகள் கூறுகின்றனர். நெல், கரும்பு, மரவள்ளி, சவுக்கு பயிர்களுக்கு தற்போது இரண்டாம் கட்டமாக உரங்களை விவசாயிகள் இடுகின்றனர். கூட்டுறவு வங்கிகளில் போதிய உரங்கள் கிடைக்காததால் விவசாயிகள் அவசரத் தேவைக்கு தனியார் உரக்கடைகளை அணுகுகின்றனர்.

இதை பயன்படுத்தும் விற்பனையாளர்கள் தட்டுப்பாட்டை காரணம் காட்டி, விலை உயர்த்தி விற்கின்றனர். டி.ஏ.பி., யூரியா போன்ற உரங்கள் கூட்டுறவு வங்களில் கூட விற்கவில்லை. வெளி மார்க்கெட்டிலும் போலியாக தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதிக விலைக்கு விற்கின்றனர்.உர விற்பனையாளர்கள் கூறும் போது," தேர்தலுக்கு பின் தற்போது உரங்களுக்கான மானியங்களை குறைத்து, விலையை உயர்த்தி சப்ளை செய்வதால் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. உரங்களின் விலை உயர்வு தொடர்வதால் விவசாயிகள், விற்பனையாளர்கள் பெரிதும் பாதிக்கின்றனர். நிலையான விலை வைத்து தட்டுப்பாடின்றி சப்ளை வழங்க வேண்டும்' என்றனர். உரங்களின் சரியான விலை பட்டியல் அறிவித்து, தட்டுப்பாட்டை போக்கி நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

**கொப்பரை விலையில் மாற்றமில்லை விவசாயிகள் குஷியில் குறைவில்லை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 23,2011,23:30 IST

பொள்ளாச்சி :தேங்காய் சீசன் துவங்கினாலும், விலை குறையாததால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். காங்கேயம் மார்க்கெட்டில், கடந்த 16ம் தேதி நிலவரப்படி, கொப்பரை, கிலோவுக்கு 63- 64 ரூபாய் வரை விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய், 15 லோ டின்னுக்கு 1,440, தேங்காய் பவுடர், கிலோவுக்கு 100 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது. விவசாயிகள் பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் (மட்டை தவிர), டன்னுக்கு 17 ஆயிரத்து 500 ரூபாய் முதல் 18 ஆயிரம் வரை விலை கிடைத்தது.பொள்ளாச்சி, உடுமலை தாலுகாக்களில் இருந்து, சென்னை உட்பட பல மாவட்டங்களுக்கு, உணவுத் தேவைக்காக அனுப்பும் தேங்காய், டன்னுக்கு 16 ஆயிரத்து 500 முதல் 17 ஆயிரம் வரையும், விவசாயிகள் பறித்து இருப்பு வைத்துள்ள தேங்காய், ஒன்றுக்கு 10.50 - 11.00 வரையும் விலை வழங்கப்பட்டது. நேற்றைய நிலவரப்படி, கொப்பரை, தேங்காய் எண்ணெய் விலையில், எந்த மாற்றமும் ஏற்படவில்லை. தேங்காய் பவுடர், கிலோவுக்கு 6 ரூபாய் உயர்ந்து, கிலோ 106 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தேங்காய் சீசன் காலத்திலும் விலை சரியாமல் இருப்பதால், விவசாயிகளும், கொப்பரை உற்பத்தியாளர்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறுகையில், "தேங்காய் வரத்து

குறைவாக இருப்பதால், மார்க்கெட்டில் தேங்காய், கொப்பரைக்கு கிராக்கி நிலவுகிறது. மே மாதங்களில் தேங்காய் உற்பத்தி 10 சதவீதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. தேவையும் அதிகமாக உள்ளதால், மார்க்கெட்டில், தேங்காய் சார்ந்த பொருட்களின் விலை, ஒரே நிலையாக உள்ளது' என்றனர்.

**ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மக்காச்சோளம் இருப்பு வைப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 23,2011,01:36 IST

ஆனைமலை : ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மக்காச்சோளம் உலர வைத்து இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஆனைமலை சுற்றுப்பகுதியில் மக்காச்சோளம் உற்பத்தி ஓரளவு இருப்பதால் விவசாயிகள் மக்காச்சோளத்தை ஆனைமலையில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் கொண்டு வந்து இருப்பு வைத்துள்ளனர். விவசாயிகள் மக்காச்சோளத்தை உலர வைத்து இருப்பு வைத்து நல்ல விலை கிடைக்கும்போது விற்பனை செய்கின்றனர். தற்போது ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் 3,000 மக்காச்சோள மூட்டைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இந்த தகவலை ஆனைமலை ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

**கிணத்துக்கடவில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 23,2011,01:35 IST

கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு துவங்கிய மழை அதிகாலை வரை இரண்டு உழவு மழையாக பெய்தது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கிணத்துக்கடவு பகுதியில் கடந்த ஒரு வாரமாக வெயில் சுட்டெரித்து வந்தது. நேற்றுமுன்தினம் மாலை 3.00 மணி முதலே கருமேகம் சூழ்ந்தது. மழை வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மாலை 6.00 மணியில் இருந்து 6.30 மணி வரை தூறல் மழை மட்டுமே பெய்தது. இதனால், மழை ஏமாற்றிவிட்டது என விவசாயிகள் கவலையில் ஆழ்ந்தனர். பின், நள்ளிரவு 11.30 மணிக்கு துவங்கிய மழை அதிகாலை 4.30 மணி வரை இடைவிடாது பெய்தது. இம்மழை இரண்டு உழவு மழை இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர். இம்மழையை பயன்படுத்தி விவசாயிகள் உழவு பணியை துவக்கியுள்ளனர். பின், பொறியல் தட்டை சாகுபடியை துவக்க விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர்.

**சிறுதானிய பயிர்களால் தொடரும் பசுமை புரட்சி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 23,2011,01:23 IST

கோவை : "சிறுதானிய பயிர்கள் நிரந்தர பசுமை புரட்சிக்கு வழிவகுக்கும்' என்று வேளாண் பல்கலையில் நடந்த கருத்தரங்கில், சோள ஆராய்ச்சி இயக்குனரக இயக்குனர் பேசினார். கோவை, தமிழ்நாடு வேளாண் பல்கலையில் சிறு தானியங்கள் மற்றும் தீவன பயிர்கள் குறித்த கருத்தரங்கு நடந்தது. பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை வகித்தார். ஐதராபாத், சோள ஆராய்ச்சி இயக்குனரக இயக்குனர் பாட்டில் முன்னிலை வகித்து பேசியதாவது:கிராம மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு சிறுதானிய பயிர்கள் முக்கிம். மாறி வரும் பருவநிலையிலும் சிறுதானிய வகைகளில் அதிக மகசூல் கிடைக்கிறது; சத்துக்களும் நிறைந்திருப்பதால் நிரந்தர பசுமை புரட்சிக்கு வழிவகுக்கும். தேசியளவில் பருத்தி, சோயாபீன்ஸ் பரப்பு அதிகரித்துள்ளதால், சிறுதானியங்களின் உற்பத்தி அளவு குறைந்துள்ளது. இருப்பினும், விஞ்ஞானிகளின் பங்களிப்பால் உற்பத்தி திறன் அதிகமாக இருப்பது வரவேற்கத்தக்கது. கடந்த 60 ஆண்டுகளுக்கு முன் எக்டருக்கு 386 கிலோவாக இருந்த உற்பத்தி திறன் தற்போது, 1,003 கிலோவாக அதிகரித்துள்ளது. நெல்லுடன் ஒப்பிடும்போது புரதம், நார், கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு போன்ற வைட்டமின் சத்துக்கள் சிறுதானியங்களில் அதிகளவில் உளளன. பாலுக்கு இணையான கால்சியம் கேழ்வரகில் இருப்பது குறிப்பிடத்தக்கது. சர்க்கரை நோயாளிகள், உடல் பருமன் உடையவர்களுக்கு ஏற்ற உணவு வகை இது. பொது வினியோகத்துறை மூலமாக சிறு தானியங்கள், அதன் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை வினியோகிப்பதன் மூலம், சாகுபடியை ஊக்குவிக்க மத்திய அரசு உதவ வேண்டும். இவ்வாறு, பாட்டில் பேசினார். பல்கலை ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா, சோள ஆராய்ச்சி இயக்குனரக முதன்மை விஞ்ஞானி தயாகர் ராவ் உட்பட பலர் பேசினார்.

**மார்த்தாண்டம் மார்க்கெட்டில்அன்னாசிபழம் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 23,2011,02:42 IST

மார்த்தாண்டம்: மார்த்தாண்டம் மார்க்கெட்டில் அன்னாசிபழம் விலை குறைந்துள்ளது.குமரி மாவட்டத்தில் பொதுவாக ஏப்ரல், மே மாதங்களில் கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். இந்த சீசனில் இளநீர் மற்றும் ஜூஸ் வகைகள் செய்ய பயன்படுத்தும் அன்னாசி, ஆரஞ்ச், திராட்சை பழங்கள் விலை அதிகரிப்பது வழக்கம். கிராமபுற கடைகளிலும் பழங்களும், பழவகை ஜூஸ்களும் விற்பனை ஜோராக நடக்கும்.கடந்த ஒரு வாரமாக குமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம், குழித்துறை, களியல், பேச்சிப்பாறை, திருவட்டார் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. இதனால் ஜூஸ் வியாபாரம் குறைந்துள்ளது.

இந்நிலையில் அன்னாசிபழங்கள் கேரளாவில் இருந்து குமரி மாவட்டத்திற்கு அதிக அளவில் கொண்டு வரப்படுவதால் மார்த்தாண்டம் மார்க்கெட்டில் அன்னாசி பழங்கள் விலை குறைந்துள்ளது. இது குறித்து மார்த்தாண்டம் மார்க்கெட் அன்னாசிபழ வியாபாரி தினேஷ் கூறியதாவது:குமரி மாவட்டத்தில் பொன்மனை, சுருளோடு, குலசேகரம் போன்ற பகுதிகளில் அன்னாசி விவசாயம் நடந்து வருகிறது. ஆனால் அங்கு தற்பொழுது போதுமான அளவு உற்பத்தி இல்லை. இதனால் கேரளா மாநிலம் வாழைகுளத்தில் இருந்து அன்னாசிபழம் கொண்டு வரப்படுகிறது. திருவனந்தபுரம் சாலை மார்க்கெட்டில் ஒரு கிலோ 27 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் மார்த்தாண்டத்தில் 26க்கு விற்பனை நடக்கிறது. திருமண சீசன் என்பதால் விலை அதிகரிக்க வேண்டும். கடந்த ஆண்டு இந்த சீசனில் 40 ரூபாய் வரை சென்றது. தற்பொழுது விலை குறைந்துள்ளது. ஆனால் விரைவில் விலை ஏறலாம். இவ்வாறு தினேஷ் கூறினார்.

**தேயிலை சாகுபடியில் "பசுமை'; காய்கறி சாகுபடியில் "கவலை' :கோடை மழை தாக்கத்தில் மாற்றங்கள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 23,2011,23:43 IST

குன்னூர்:குன்னூரில் கொட்டி தீர்க்கும் கோடை மழையால் தேயிலை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்; காய்கறி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.நீலகிரி மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் மழை பெய்தாலும், கடந்த மூன்று நாளில் மட்டும் குன்னூரில் 142 மி.மீ., மழை பெய்துள்ளது. கேத்தி, பர்லியார் சுற்றுவட்டார பகுதிகளில் 80 மி.மீ., மழையும், நிலச்சரிவு அபாயமுள்ள பர்லியார், ஹில்குரோவ் பகுதிகளில் 100 மி.மீ.,க்கு மேல் மழையும் கொட்டி தீர்த்தது. "கோடை காலங்களான ஏப்ரல், மே மாதங்களில் தற்போது பெய்து வரும் மழை, கடந்த 20 ஆண்டுகளை ஒப்பிடுகையில் மிக அதிகம்,' என உபாசி அறிவியல் ஆய்வு மையம் கூறுகிறது.மழையால், கடந்த சில மாதங்களாக நிலவிய கடும் பனிப்பொழிவில் வாடிப்போயிருந்த தேயிலை செடிகள் செழித்து தழைத்து வளரத் துவங்கியுள்ளன; இதன் மூலம் சாகுபடி அதிகரித்து, தேயிலை உற்பத்தி பெருகும், என கூறப்படுகிறது. மாறாக, கேரட், உருளை கிழங்கு, முட்டை கோஸ் உட்பட காய்கறி தோட்டங்கள் மழையால் சேதமடைந்துள்ளதாக, விவசாயிகள் பலர் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து, மாவட்ட தோட்டக்கலை துறைக்கு விவசாயிகள் புகார் தெரிவிக்க, "மழையால், சாகுபடி பரப்பில் 50 சதவீதத்துக்கு அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள காய்கறி தோட்டங்கள் குறித்த ஆய்வு நடத்தி, கணக்கு காட்ட வேண்டும்,' என அந்தந்த தோட்டக்கலை அலுவலகங்களுக்கு மாவட்ட தோட்டக்கலைத் துறை அலுவலகம் உத்தரவிட்டுள்ளது.திணறும் சுற்றுலா வாகனங்கள்;கோடை "குளு, குளு' சீசனை அனுபவிக்க மேட்டுப்பாளையம் - குன்னூர் வழியாக தினமும் 100க்கணக்கான சுற்றுலாப் பயணிகளின் வாகனங்கள் வருகின்றன. மதியம்

துவங்கி இரவு முழுக்க பரவலாக பெய்யும் இடி, மின்னலுடன் கூடிய மழையால், வாகனங்களில் வரும் சுற்றுலா பயணிகள், தங்கள் வாகனங்களை மலை பாதையில் செலுத்த தயங்குகின்றனர். மலை மாவட்ட சாலையில் வாகனங்களை இயக்கி பழக்கமில்லாத வாகன ஓட்டிகளால், அவ்வப்போது வாகன நெரிசலும், விபத்தும் ஏற்படுகிறது. மலை பாதையில் ஆங்காங்கே போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தாலும், அவ்வப்போது ஏற்படும் வாகன நெரிசலை சமாளிக்க அவர்கள் சற்று திணற வேண்டியுள்ளது.

**மானிய விலையில்விவசாயிகளுக்கு விதைகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 22,2011,22:05 IST

தேனி:கோடை மழை தொடங்கி உள்ள நிலையில், விதைப்புக்கு தயாராகும் விவசாயிகள் மானிய விலையில் விதைகளை பெற்றுக்கொள்ள விவசாயத்துறை அழைப்பு விடுத்துள்ளது. விவசாய விரிவாக்க மையங்களில் 77 டன் நெல் இருப்பு உள்ளது. நெல் விதை கொள்முதல் செய்யும் விவசாயிகளுக்கு கிலோவிற்கு ஐந்து ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு, கொள்ளு உட்பட பயறு வகை விதைகள் 33 டன் இருப்பு உள்ளது. எண்ணெய் வித்துக்கள் நான்கு டன் உள்ளது. பருத்தி விதைகள் மூன்று டன் உள்ளது.பயறு வகை, எண்ணெய் வித்து விதைகள் வாங்கும் விவசாயிகளுக்கு கிலோவிற்கு 12 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. பருத்தி விதைகளுக்கு மானியம் அறிவிக்கப்படவில்லை.கோடை மழை தொடங்கி உள்ள நிலையில் விவசாயிகள் விதைப்பிற்கு தயாராகி வருகின்றனர். எனவே விதைகள் தேவைப்படும் விவசாயிகள் விரிவாக்க மையங்களை அணுகி பெற்றுக்கொள்ளலாம்.

**வரத்து கால்வாய்களில் குப்பைவிவசாயம் பாதிக்கும் அபாயம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 22,2011,21:51 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூர் கண்மாய்களுக்கு நீர் செல்லும் வரத்து கால்வாய்களில் கொட்டப்படும் குப்பைகள், மண்டி கிடக்கும் முட்புதர்களால் பாதிப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.வெள்ளமடம், தட்டான்குளம், புதுக்குளம், மொட்டைபத்தான்குளம் ஆகிய குளங்களில் இருந்து வெளியேறும் தண்ணீர் வடமலைக்குறிச்சி கால்வாய் வழியாக வடமலைக்குறிச்சி கண்மாய்க்கு செல்கிறது. இக்கண்மாய் தண்ணீரால் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயம் நடந்து வருகிறது. வடமலைக்குறிச்சி கண்மாய்க்கு தண்ணீர் வரும் பிரதான

கால்வாயாக இருக்கும் இக்கால்வாய் தற்போது மண்மேடிட்டு, முட்புதர்கள் நிறைந்து காணப்படுகிறது.அய்யம்பட்டி, வெங்கடேஸ்வரபுரம், பெருமாள் பட்டி பகுதிகளில் சேரும் குப்பைகளும் வரத்து கால்வாயில் கொட்டப்பட்டு வருகிறது.

இக்கால்வாயின் குறுக்கே ஸ்ரீவி.,-மதுரை ரோட்டில் ராமகிருஷ்ணாபுரத்தில் கட்டப்பட்டுள்ள பாலத்தில் தண்ணீர் செல்லும் மதகுகளில் குப்பைகளை கொட்ட நகராட்சிஅதிகாரிகள் கொட்ட தடை விதித்தும் இன்றும் மக்கள் கொட்டி வருகின்றனர்.இதனால் மதகுகளில் அடைப்பு ஏற்பட்டு தண்ணீர் செல்லாமல் தேங்குகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் செல்ல முடியாமல் கண்மாய் கரையோரம் குடியிருப்பவர்களின் வீடுகளில் புகுந்து விடுகிறது. இப்பிரச்னையை தவிர்க்க அதிகாரிகள் குப்பைகளை மதகுகளில் கொட்டுவதை தடை செய்ய வேண்டும். பொதுப்பணித்துறையினர், வரத்து கால்வாய்களில் முட்புதர்களை அகற்றுவதோடு கால்வாயை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் அவதி: அரிசி, கோதுமையை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் வெங்கையா நாயுடு பேட்டி*

*சென்னை, ஏப்ரல்.23–*
*அரிசி, கோதுமை அதிக அளவு உற்பத்தியானதால் உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டு வருகிறார்கள். இதனை தவிர்க்க மத்திய அரசு உடனடியாக அரிசி, கோதுமையை ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டும் என்று வெங்கையா நாயுடு எம்.பி. கூறினார்.*
*பாரதீய ஜனதா கட்சியின் முன்னாள் அகில இந்திய தலைவர் வெங்கையா நாயுடு எம்.பி. சென்னையில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:–*
*உற்பத்தி அதிகம்*
*உணவு தானியங்கள் குறிப்பாக அரிசி மற்றும் கோதுமையை ஏற்றுமதி செய்ய மத்திய*

அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நெல் கொள்முதல் விலை குறைந்தபட்ச ஆதார விலையை விட மிகவும் குறைந்துவிட்டது. ஆனால் உற்பத்தி செலவு பல மடங்கு அதிகரித்திருப்பதால் நெல் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

உணவுப் பொருட்களை வைப்பதற்கான கிடங்குகளை ஒரு டன் அளவுக்கு கூட கூடுதலாக இந்த அரசு கடந்த 6 ஆண்டுகளாக உருவாக்கவில்லை. உணவு உற்பத்தி இந்த ஆண்டு 235.9 மெட்ரிக் டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை இல்லாத அளவுக்கு இது அதிகபட்ச சாதனையாகும். இந்த ஆண்டு அறுவடை கோதுமை 84.34 மெ.டன்னாகவும், அரிசி 102 மெ.டன்னாகவும் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அளவு அதிக உற்பத்தியால் இவற்றின் விலைகள் குறைந்தபட்ச ஆதார விலையைவிட மிகவும் குறைந்துவிட்டது. இதனால் வேளாண் பொருட்களுக்கான விலை கொள்கையை அரசுக்கு பரிந்துரைக்கும் ஆணையம் ஏற்றுமதியை அனுமதிக்க பரிந்துரை செய்துள்ளது. அரசிடம் 28.72 மெ.டன் அரிசியும், 17.15 டன் கோதுமையும் கையிருப்பு உள்ளது. இதுவும் அரசின் வழக்கமான கையிருப்பைவிட இரு மடங்காகும். இதற்காகவும், வேளாண் உற்பத்தி பெருக்கத்திற்காகவும் விவசாயிகளை பாராட்டுகிறோம்.

பிரதமரை வலியுறுத்துவோம்

உலக சந்தையில் உற்பத்தி குறைவால் பல நாடுகளில் கோதுமை விலை உயர்ந்துள்ளது. இங்கு அதிகமாக விளைந்து விலை குறைந்துள்ளது. எனவே இதுவே ஏற்றுமதிக்கு சரியான தருணம். ஆந்திராவில் மட்டுமே 35 லட்சம் டன் அரிசி தேவைக்கு அதிகப்படியாக கையிருப்பு உள்ளது. இதனால் அவர்கள் குறைந்தபட்ச ஆதார விலையை விட ரூ.175 குறைவாக விற்கிறார்கள்.

பல்வேறு கட்சி எம்.பி.க்கள் மார்ச் 16–ந் தேதி மத்திய வேளாண் மந்திரி சரத்பவாரை சந்தித்து அரிசி ஏற்றுமதியை அனுமதிக்கும்படி வலியுறுத்தினோம். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே அனைத்து கட்சிகளின் விவசாய பிரதிநிதிகளும், விவசாய சங்கத்தினரும் விரைவில் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து உடனடியாக அரிசி, கோதுமையை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கும்படி கோரிக்கை விடுக்க இருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆட்சியை இழக்கும்

பின்னர் நிருபர்களின் கேள்விகளுக்கு அவர் பதில் அளிக்கும்போது, “புதுச்சேரி

*கவர்னரை மத்திய அரசு உடனடியாக திரும்ப பெற வேண்டும். நடந்து முடிந்துள்ள சட்டசபை தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரி, மேற்கு வங்காளம், கேரளா ஆகிய மாநிலங்களில் ஆளுங்கட்சிகள் தங்கள் ஆட்சி அதிகாரத்தை இழக்கும். தமிழ்நாட்டில் தேர்தல் முடிந்துவிட்டதால் மின்வெட்டு அப்படித்தான் இருக்கும்'' என்றார்.*

## ஐந்தாண்டு திட்ட காலத்தில் இந்திய பொருளாதாரத்தில் 8.2 சதவீத வளர்ச்சி ஏற்படும்

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–12) நாட்டின் பொருளாதாரத்தில் 8.2 சதவீத வளர்ச்சி ஏற்படும் என்று எதிர்பார்ப்பதாக பாரத பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார். நாட்டில் உணவு பணவீக்கம் அதிகரித்து வருவது குறித்தும் கவலை தெரிவித்துள்ள அவர், உணவு தானியங்கள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.*

*பணவீக்கம் அதிகரித்து வருவது, பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. சென்ற 2010–11–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் பொருளாதாரத்தில் 8.6 சதவீத வளர்ச்சி ஏற்பட்டு இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

*தொழில்துறை வளர்ச்சி வேகம் சற்று குறைந்துள்ள நிலையிலும், வேளாண் துறையில் ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தால் நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 9 சதவீதமாக இருக்கும் என மத்திய அரசு முன்னறிவிப்பு செய்துள்ளது.*



''தென்னையைபெத்தா இளநீரு... பிள்ளையை பெத்தா கண்ணீரு... என்று உயர்வாக மதிக்கப்பட்ட எங்களை இங்கே வெட்டி சாய்த்திருக்கும் கோலத்தை பாருங்கள்'' என்று கலங்கும் தென்னை மரங்களின் இந்த காட்சி கோவை–பொள்ளாச்சி ரோட்டில் கேமராவில் சிக்கியது.

### கோவை புறநகர் பகுதிகளில்

# மனைப்பிரிவுகளாக மாறும் தென்னந்தோப்புகள்

## தேங்காய் உற்பத்தி குறையும் அபாயம்

கோவை,ஏப்.23–

கோவை புறநகர் பகுதியில் பல தென்னந்தோப்புகள் மனைப் பிரிவுகளாக மாறி வருகின்றன. இதனால் தேங்காய் உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

### தென்னை விவசாயம்

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்ற பெருமையை பெற்றிருக்கும் கோவை தென்னை விவசாயத்துக்கும் பிரபலம் ஆனது. எங்கு பார்த்தாலும் வானுயர்ந்த தென்னை மரங்களும், அவற்றிற்கு நடுவே ஊடுபயிராக பயிரிடப்பட்ட பாக்கு மரங்களும் கோவை மாவட்டத்தில் அதிகம். அதிலும் குறிப்பாக கோவை புறநகர் பகுதிகள் மற்றும் கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, ஆனைமலை, நெகமம் உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளில் தென்னை விவசாயம் அதிகமாக நடைபெற்று வருகிறது.

கோவை மாவட்டத்தில் விளையும் தேங்காய்கள் தமிழ்நாடு முழுவதும் மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களுக்கும் செல்கின்றன. அதைவிட கோவை மாவட்டத்தில் தயாரிக்கப்படும் கொப்பரை தேங்காய்கள் எண்ணை தயாரிப்புக்காக நாள்தோறும் ஆயிரக்கணக்கான டன் கணக்கில் வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

### லட்சக்கணக்கான விவசாயிகள், தொழிலாளர்கள்

மேலும் தென்னை நார்கள், மஞ்சி மூலம் கயிறு உற்பத்தியும் அதிக அளவில் நடந்து வருகிறது. கோவை மாவட்டத்தை பொறுத்தவரை தென்னை விவசாயத்தில் நேரடியாக 2 லட்சத்துக்கு மேற்பட்ட விவசாயிகளும், லட்சத்துக்கு மேற்பட்ட விவசாய தொழிலாளர்களும் பயன்பெற்று வருகிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக நல்ல நிலைமையில் இருந்த தென்னை விவசாயம் சமீப காலமாக அழிந்து வரும் சூழ்நிலையில் உள்ளது.

பருவகால மழை பொய்த்துவிடுவதாலும், அணைகளில் நீர்மட்டம் குறைந்து வருவதாலும், விவசாயத்துக்கு போதிய தண்ணீர் கிடைப்பதில்லை. மேலும் உற்பத்தியாகும் தேங்காய்களுக்கும், கொப்பரை தேங்காய்களுக்கும் நல்லதொரு விலை கிடைப்பதில்லை என்று இதற்கு பல்வேறு காரணங்கள் விவசாயிகள் தரப்பில் சொல்லப்படுகின்றன.

### விவசாய பரப்பு குறைகிறது

இதன் காரணமாக தென்னை விவசாயிகள் தங்களது தென்னந்தோப்புகளை விலைக்கு விற்று பணத்தை வாங்கி அதை வங்கியில் போட்டு வட்டியை வருவாயாக பெறுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அதிலும் குறிப்பாக தேசிய நெடுஞ்சாலைகள், முக்கிய சாலைகளை ஒட்டி உள்ள தென்னந்தோப்பு உரிமையாளர்கள் தங்களது தோப்புகளில் உள்ள தென்னை மரங்களை வெட்டி சாய்த்துவிட்டு அவற்றை மனைப்பிரிவுகளாக மாற்றி ரியல் எஸ்டேட் தொழில் செய்ய ஆரம்பித்து உள்ளனர்.

கோவையை பொறுத்தவரை கடந்த 1998–ம் ஆண்டு காலகட்டத்தில் ரியல் எஸ்டேட் தொழில் நல்ல வளர்ச்சியை கண்டது. அந்த சமயத்தில் கோவையில் நடந்த தொடர் குண்டுவெடிப்பு சம்பவம் காரணமாக கோவையில் தொழில்கள் பாதித்ததோடு, ரியல் எஸ்டேட் தொழிலும் முடங்கியது. கோவை நகரில் உள்ள முக்கிய இடங்கள்கூட ஒரு சென்ட் நிலம் ஆயிரக்கணக்கில்தான் விலை போனது.

### ரியல் எஸ்டேட் தொழிலில் விருப்பம்

அப்படி இருந்த ரியல் எஸ்டேட் தொழில் தற்போது சில ஆண்டுகளாக மிகவும் சூடுபிடித்து உள்ளது. நகரில் நடுத்தர வர்க்கத்தினர் மனை வாங்க முடியாத அளவுக்கு தற்போது விலை ஏறி இருக்கிறது. அதனால் அரசு வேலை, தனியார் நிறுவனங்களில் வேலை செய்வோர் புறநகர் பகுதிகளில் உள்ள மனைகளை குறைந்த விலைக்கு வாங்கிப்போட விரும்புகின்றனர்.

இதனால் கோவை நகரை சுற்றிய புறநகர் பகுதிகளில் பல ரியல் எஸ்டேட் நிறுவன அதிபர்கள் ஏக்கர் கணக்கில் நிலங்களை வாங்கி மனைப்பிரிவுகளாக மாற்றி விற்பனை செய்து வருகிறார்கள். இவர்களிடம் பல தென்னை விவசாயிகளும் தங்களது தோப்புகளை விற்பனை செய்வதில் மும்முரம் காட்டுகிறார்கள். இதன் காரணமாக நகரை சுற்றிலும், மற்றும் பொள்ளாச்சி, கிணத்துக்கடவு பகுதியிலும் உள்ள தென்னந்தோப்புகள் பல பொட்டல் நிலமாக மாறிவிட்டன.

### உற்பத்தி குறையும் அபாயம்

அதிலும் நெடுஞ்சாலைகளை ஒட்டிய தென்னந்தோப்புகளுக்கு மவுசு அதிகம். ஒரு ஏக்கர் 30 லட்சம், 40 லட்சம் என்று விலை போய்க்கொண்ட இருக்கிறது. குறிப்பாக கோவை–பொள்ளாச்சி சாலை, கோவில்பாளையம், கிணத்துக்கடவு, வடுகபாளையம் பகுதிகளில் ஏராளமான ஏக்கர் பரப்பில் நின்றிருந்த தென்னை மரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டு கல் போடப்பட்டு வருகின்றன.

இதனால் தென்னை விவசாயம் பாதிக்கப்பட்டு இருப்பதோடு, எதிர்காலத்தில் தேங்காய் உற்பத்தியும் குறையும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. குலத்தொழில்போல் பரம்பரை, பரம்பரையாக தென்னை விவசாயம் செய்து வந்தவர்கள் கூட ஒரே நேரத்தில் லட்சக்கணக்கில் பணம் பார்ப்பதற்காக தங்களது தென்னந்தோப்புகளை விற்று வருகின்றனர். இது தென்னை விவசாயத்துக்கு பெயர் போன கோவைக்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்கிறார்கள் பெரும் விவசாயிகள்.